**சிறப்பு தலைப்பு: ஏன் கிறிஸ்தவர்கள் துன்பபடுகிறார்கள்**
**SPECIAL TOPIC: WHY DO CHRISTIANS SUFFER?**

1. தனிப்பட்ட ரீதியான பாவம் காரணமாக (தற்காலிக தீர்ப்பு). எல்லா பிரச்சினைகளும், எதிர்மறையான சூழ்நிலைகளும் பாவத்தின் விளைவாக இருக்கின்றன என்பதை இது குறிக்கவில்லை (ஒ.பா. யோபு; சங்கீதம் 73; லூக்கா 14: 1-5; நெகேமியா 9; யோவான் 9; அப்போஸ்தலர் 5: 1-11; 1 கொரி. 11: 29-. 30; கலா. 6: 7).
2. கிறிஸ்தவத்தன்மையை வளர்ப்பதற்கு (எபி. 5: 8). மனித ரீதியாக பேசினால் இயேசு கூட முதிர்ச்சியடைய வேண்டியிருந்தது, ஆகவே அவருடைய சீஷர்களாகிய நாமும் ஆகவேண்டும் (ஒ.பா. ரோமர் 5: 3-4, 8: 28-29; 2 கொரி. 12: 7-10; பிலி. 3:10; எபி. 12: 5-12; யாக்கோபு 1: 2-4; 1 பேது. 1: 7).
3. வல்லமை மிகுந்த, பயனுள்ள சாட்சியை வளர்ப்பதற்கு (ஒ.பா. மத் 5: 10-12; யோவான் 15: 18-22; 1 பேதுரு 2: 18-21, 3: 13-17).
4. புதிய யுகத்தின் பிரசவ வேதனைக்கு அடையாளமாக (ஒ.பா. மத் 24: 6; மாற்கு 13: 8).

இந்த வீழ்ச்சியடைந்த உலகின் அநியாயத்தையும் தீமையையும் சமாளிக்க எனக்கு உதவிய இரண்டு புத்தகங்கள் ஹன்னா விட்டால் ஸ்மித் (Hannah Whithall Smith), எழுதிய ***The Christian's Secret of a Happy Life*** மற்றும் ஜான் டபிள்யூ. வென்ஹாம் (John W. Wenham), எழுதிய ***The Goodness of God***

தேவனின் கோபத்தின் அல்லது நிராகரிப்பின் அடையாளம் பிரச்சினைகளும் துன்பங்களும் அல்ல என்பதை விசுவாசிகள் நினைவில் கொள்ள வேண்டும். வீழ்ச்சியடைந்த உலகில் உண்மையுள்ளவர்களாய் பின்பற்றுபவர்களுக்கும் தீய காரியங்கள் நிகழ்கின்றன (ஒ.பா. 1 பேதுரு 4: 12-19). தேவனின் வாக்குறுதிகள் மற்றும் கிறிஸ்துவின் தன்னையே பலியாக்கிய மரணம் ஆகியவை தேவனின் அன்பின் அறிகுறிகளாகும் (ஒ.பா. ரோமர் 5: 8). வேதம் தற்காலிக சூழ்நிலைகளுக்கு மேலே முன்னுரிமை பெற வேண்டும்!

Copyright © 2014 Bible Lessons International